



# மஸ்ஜிட் இந்தியா சம்பவத்தின் எதிரொலி: கோலாலம்பூர் ஆபத்தான நகரமா?

## தகவல்களை நிராகரித்தார் மேயர்

கோலாலம்பூர், ஆக. 27- ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் பாதாள குழி சம்பவத்தின் எதிரொலியால் கோலாலம்பூர் மாநகரமே பாதுகாப்பற்றது என்ற முடிவுக்கு வர வேண்டாம் என்று கோலாலம்பூரின் புதிய மேயர் மைமுனா ஷரிப் நேற்று வேண்டுகோள் விடுத்தார்.



கோலாலம்பூர் என்பது மிக நீண்ட காலத்திற்கு முன்பு பல்வேறு மேம்பாடுகளுக்கு உண்டான மாநகரம். எனவே இப்போது அது பாதுகாப்பானது இல்லை என்று பரப்பப்படும் செய்திகளை யாரும் நம்ப வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

எப்போதுமே இது போன்ற செய்திகளுக்கு ஒரு ஆதாரமும் விரிவான ஆய்வும் வேண்டும். மாநகர மன்றத்தை பொறுத்த வரை ஒரு பணிக்குழு எப்போதும் இயங்குகிறது. அதில் பூமியியல் இலாகாவும் பொதுப்பணி இலாகாவும் மற்ற பல பிரிவுகளும் கூடி ஒரு சம்பவம் அல்லது ஒரு புகார் குறித்து விசாரிக்கின்றன.

இந்த இலாகாக்களின் ஆய்வின் படி கோலாலம்பூர் இன்னும் பாதுகாப்பானது தான். அது ஆபத்து நிறைந்தது என்று சொல்லும் குற்றச்சாட்டுகளை யாரும் நம்ப வேண்டாம் என்றார் அவர். கடந்த 2015 ஆம் ஆண்டு ஒரு சுற்றுச்சூழல் போராட்ட வாதி கோலாலம்பூர் பற்றி வெளியிட்டிருந்த ஒரு காணொளி இப்போது வலைத்தளங்களில் வைரலாவது பற்றி அவர் குறிப்பிட்டார்.

அவரது கருத்துப்படி மலேசியாவில் உள்ள பல நகரங்கள் பாதுகாப்பற்றவை. எந்த நேரத்திலும் மிகப்பெரிய பாதாள குழிகள் அங்கு வெடிக்கலாம் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் கோலாலம்பூரின் அடித்தளங்களில் 40%-60% வரை சுண்ணாம்பு கல் பாறைகள் இருக்கின்றன. அவை பாரத்தை தாங்காது. அதே போல முறையற்ற மேம்பாடு களும் முறையின்றி பொருத்தப் பட்ட குழாய் மற்றும் கால்வாய் கள் மிகப்பெரிய பாதாள குழிகளை ஏற்படுத்தும் என்று அந்நபர் கூறியிருந்தார்.

இவைகளையெல்லாம் நம்ப வேண்டாம் என்று கூறிய மேயர் மைமுனா ஜாலான் மஸ்ஜிட் இந்தியா உட்பட கோலாலம்பூர் முழுவதும் பாதுகாப்பான இடம் தான். யாரும் அச்சம் கொள்ள வேண்டாம் என்று சொன்னார்.